# <u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

## <u>MCOP No: 71/2023</u>

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | செந்தில்குமார் |
| த.க.பெயர் | சென்னி |
| கிராமம் | பிரப் நகர் |
| மாவட்டம் | |
| வயது | 40 |

<u>ம.சா. 1 நாள் 06.03.2026</u>

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் 1ம் மனுதாரர். 2ம் மனுதாரர் எனது சகோதரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.2 |
| 3. | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.3 |
| 4. | என் தகப்பனாரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.4 |
| 5. | என் தகப்பனாரின் இறப்பு சான்று | ம.சா.ஆ.5 |
| 6. | என் தகப்பனாரின் வாரிசு சான்று | ம.சா.ஆ.6 |
| 7. | என் தாயார் பாப்பாத்தியின் இறப்பு சான்று | ம.சா.ஆ.7 |
| 8. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.8 |
| 9. | பார்வை மகசர் | ம.சா.ஆ.9 |
| 10. | பிரேத பரிசோதனை அறிக்கை | ம.சா.ஆ.10 |
| 11 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (கார்) | ம.சா.ஆ.11 |
| 12 | குற்ற இறுதியறிக்கை | ம.சா.ஆ.12 |

| | | |
|---|---|---|
| 13 | வாகனத்தின் பதிவு சான்று | ம.சா.ஆ.13 |
| 14 | 1 ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் தாள் | ம.சா.ஆ.14 |
| 15 | 2 ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் தாள் | ம.சா.ஆ.15 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். தண்டபாணி , பாண்டியன் எனக்கு உறவினரா என்றால் இல்லை. தண்டபாணியை எனக்கு தெரியாது, பாண்டியன் என்பவரும் எனக்கு தெரியாது. அவர்கள் என் தகப்பனாருக்கு வேண்டியவர்களா என்றால் எனக்கு தெரியாது. மாதிரி வரைபடத்தில் விபத்து சாலையின் மத்திய பகுதியில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் திடிரேன சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் தகப்பனாரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதால் நாங்கள் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் வயதை காண்பிக்க ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தற்போது 40. என் தகப்பனாருக்கு இறக்கும்போது எனக்கு 34 வயது. என் தகப்பனாருக்கு 52 வயது. நான் கூலிவேலை செய்து வருகிறேன். என் தம்பியும் கூலி வேலை செய்து வருகிறார். நானும் என் தம்பியும் என் தகப்பனாரின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை குட்வில் ஆட்டோ மோட்டார்ஸ் உரிமையாளர் மதியழகன் என்பவருக்கு ரூ150000/-க்கு விபத்திற்கு முன்பு விற்பனை செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர் வாகனத்தில் பெயர் மாற்றம் ஏற்படுத்தாமல் 1 ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செந்தில்குமார் மேற்படி வாகனத்திற்கு பெயர் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளாமலும் காப்பீட்டு சான்று பெறாமலும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, விபத்து ஏற்படுத்தியது உண்மை. மேற்படி கார் 1 ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் 1 ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் வருமானத்தை காண்பிக்கும் ஆவணம் தாக்கல்

செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.06 17:13:11 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS